REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 26உ திங்கள் (9—5—55) ★ ★ வெளியூர்: சித்திரை 27உ செவ்வாய் (10—5—55) [இதழ் 280

அணுகுண்டு யுத்த ஆபத்து

"அணு, நீர்வளிக் குண்டு யுத்தம் பற்றி பெரிய போர் நிபுணர்கள்—குறிப்பாக பிரிட்டிஷ் நிபுணர்கள்—பொறுப்பற்ற கருத்து கொண்டிருப்பது ஆச்சரியமாயிருக்கிறது.

"இந்த குண்டுகள் உபயோகிக்கப்படும் யுத்தங்கள் பயங்கரம் விளைவிக்கும்.

"ஆயிரக்கணக்கான அணு குண்டுகளையும் நூற்றுக்கணக்கான நீர்வளிக் குண்டுகளையும் வீசினுல், ஐரோப்பா, அமெரிக்கக் கண்டங்கள் 'அதோகதி'யாகிவிடும். அதிலும் மக்கட்பெருக்கம் மிகுந்த நாடுகளுக்கு ஆபத்து அதிகமே," என்று ரஷ்ய பாதுகாப்பு மந்திரி ஜுகாவ் கூறியிருக்கிறார்.

தொழிலாளருடன் நமது தொடர்பு

கோவா விடுதலைப் போர்

தொண்டர்களுக்குக் கடுஞ்சிறை

கடந்த செப்டம்பர் மாதம் 17-ந் தேதி அறப்போரில் ஈடுபட்ட கோவா விடுதலை வீரர்களுக்கு ஓராண்டு முதல் எட்டு ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அளிக்கப் பட்டுள்ளதாக இங்குள்ள தேசிய வட்டாரத்தினருக்கு தகவல் கிடைத்துள்ளதாம்.

8 - ஆண்டு சிறைத் தண்டனை பெற்ற மூன்று தொண்டர்களுக்கு 15 ஆண்டு காலத்திற்கு அரசியல் உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டனவாம்.

லோகியா விடுதலை

உயர் நீதிமன்றக் கேள்வியின் எதிரொலி பலன் தருகிறது

மக்கள் சோஷலிஸ்டு கட்சித் தலைவரான டாக்டர் லோகியாவையும், மற்றும் இரு தொண்டர்களையும் மணிப்பூர் சர்க்கார் விடுதலை செய்தனர் என்று தெரிகிறது.

அவர்கள் தடுப்புக்காவல் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டிருந்தனர்.

டாக்டர் லோகியாவின் நண்பர், இந்திய தலைமை உயர் நீதிமன்றத்தில் 'ஹேபியஸ் கார்பஸ்' மனு தாக்கல் செய்திருந்ததும், அதனை ஒட்டி நீதிமன்றம் ,ஏன் லோகியாவை விடுதலை செய்யக்கூடாது?' என்பதற்கான காரணம் காட்டுமாறு மணிப்பூர் சர்க்காரைச் கேட்டிருந்ததும் நினைவிருக்கலாம்.

ஜம்மு எல்லையில் 12 பேர் பலி!

பாக். போலீசார் சுட்டாராம்!

ஜம்முவைச் சேர்ந்த நிருசாவால் கிராமத்தில் மத்திய டிராக்டர் நிறுவனத்தைச் சேர்ந்த குழு ஒன்றின் மீது, பாகிஸ்தான் எல்லைப் போலீசார் சென்ற சனிக்கிழமையன்று சுட்டதினுல் ஒரு இந்திய இராணுவ அதிகாரி உட்பட 12 பேர் இறந்தனர் என்று தற்காப்பு இலாகா அறிக்கை ஒன்று கூறுகிறது.

நிகோவால் கிராமம் இந்திய எல்லைக்குள் இருப்பதாம். அது ரணவீரசிங்கபுரம் எனுமிடத்திலிருந்து 8 மைல் தொலைவிலிருப்பதாம்.

கம்யூனிஸ்டுகள் கதறுவானேன்?

நம்மை அடக்க நினைத்த ஆச்சாரியார் 'பாதுகாப்புக் கைதி'யான விசித்திரம்!

திருச்சி மே தின விழாவில் தோழர் சம்பத் முழக்கம்

★

"ஏறத்தாழ 65 ஆண்டுகளுக்கு முன், அமெரிக்காவில்—சிகாகோ நகரில் பாட்டாளி வர்க்கம் 8 மணி நேர வேலை—ஓய்வு—இன்ன பிற வாழ்க்கை வளத்துக்காக உரிமை முழக்கம் செய்தது; அதற்கு எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியம்—மதவாதிகள்—முதலாளிகள் கைகோர்த்து, பாட்டாளி வர்க்கத்தின் உரிமை முழக்கத்தைத் தகர்த்தெறிய, வேலைநிறுத்தம் செய்த பாட்டாளி வர்க்கத்தை நோக்கிச் சுட்டது; துப்பாக்கிக் குண்டுக்கு இரையானோர் சிலர்; தூக்கிலிடப்பட்டனர் சிலர்; குற்றங்கள் சுமத்தி, வழக்குகள் பல தொடர்ந்தனர்; ரத்தக் கறையை உண்டுபண்ணியது அமெரிக்க ஏகாதிபத்தியம் சர்வாதிகாரம் செய்தது! பாரிசில் இரண்டாவது அகில மாநாடு கூடி, அந்த நாளை, ஆண்—பெண் அனைவரும்—பாட்டாளிவர்க்கம் அனைத்தும், மே 1-ல், சிறப்பாக—உரிமை தினமாகக் கொண்டாட தொழிலாளத் தலைவர்கள் முடிவு செய்தனர்.

"தொழிலாளர்களுக்காக தி. மு. கழகம் பணிபுரியத் தவறியதில்லை; மே தின விழாவை, இந்த நாட்டில் நாம்தான் முதன் முதலில் அறிமுகப்படுத்தினோம்—கொண்டாடினோம். நாகையில் நடைபெற்ற இரயில்வே வேலை நிறுத்தத்தின்போதும் தொழிலாளர்கள் பக்கமிருந்து பணிபுரிந்தோம்; பிரகாசம் ஆட்சியில், பொன்மலை—ஈரோடு இரயில் நிறுத்தப் போராட்டத்திலும் நாம் பின்வாங்கியதில்லை; தொழிலாளர்களை அதிகார வர்க்கம்—திருச்சியிலிருந்த ஹாரிசன் என்ற வெள்ளை போலீஸ் அதிகாரி மூலம் துப்பாக்கியால் சுட்டது; மிருகம்போல் வெறியாட்டம் நடத்தப்பட்டது; அன்றும் நாம் தொழிலாளர் பக்கம் நின்றோம். ஓமந்தூரார் ஆட்சியிலே, சென்னை 'பக்கிங்காம் மில்' தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தின்போதும் தொழிலாளருக்குப் பக்கபலமாக இருந்தோம்; சர்க்காரை எச்சரித்தோம்; கண்டனக் கணைகள் தொடுத்தோம்; தொழிலாளருக்காகக் குரல் கொடுத்தோம்; தொழிலாளர்களை சர்க்காருக்குக் காட்டிக்கொடுக்காமல் தொழிலாளர்களை ஒன்றுபடுத்தி வந்திருக்கிறோம்; எப்பொழுதுமே அவர்களுக்காகப் பாடுபட்டு வந்திருக்கிறோம்.

"அண்ணு அவர்களும், நடராசன் போன்றவர்களும் தொழிலாளர்களிடையே நல்ல பணி பல புரிந்தவர்கள்; தொடர்ந்து தொழிலாளருக்காகப் பாடுபட்டு வருபவர்கள்; அண்ணு அவர்கள், திரு. வி. க. அவர்களுடன் தொழிற்சங்கப் பணியில் ஈடுபட்டவர்; இது, கம்யூனிஸ்டுகளுக்குத் தெரியாது—புரியாது; நாகபுரியில் நடைபெற்ற தொழிற்சங்க மாநாட்டுக்கு அண்ணு அவர்களும் பிரதிநிதியாகச் சென்றிருந்தார்; அந்த மாநாட்டில், தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினைகளை ஆங்கிலத்தில், வெகு அழகாக கருத்தாழத்தோடு, அனைவரும் அறிய, பொறுப்புணர்ந்து பேசி, தொழிலாளரின் அவல நிலை நீங்க வழிவகை கூறியவர்தான் நமது அண்ணு அவர்கள்,"

—இவ்வாறு, திருச்சி நகர தி. மு. கழகத்தின் சார்பில், 1—5—55 அன்று மாலை 7 மணிக்கு, திருச்சி டவுன் மண்டபத்தில், தோழர் எம். எஸ். மணி தலைமையில் நடைபெற்ற மே தின விழாவில் சொற்பொழிவாற்றிய தோழர் ஈ. வெ. கி. சம்பத் கூறினார்.

தொடர்ந்து, தோழர் சம்பத் அவர்கள் பேசியதாவது :—

"உலக முழுவதும் பாட்டாளி மக்கள் விமரிசையாக—'அர்த்த புஷ்டி'யுடன் இத் தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருப்பார்கள். வழக்கம் போல் தி. மு. கழகமும் இம்மேதின விழாவை தமிழ் நாடு முழுவதும்—(திராவிடமெங்கணும் கொண்டாடிக் கொண்டிருக்கிறது; அதேபோல் அமெரிக்காவானுலும்—ரஷ்யாவானுலும் — சீனுவானுலும்—என்—இரு நாடுகளுக்கிடையே 'பந்து' போல் இருக்கும் இந்தியாவும் கொண்டாடிக் கொண்டிருக்கும்.

"தி. மு. கழகம், அந்தந்தத் துறையில் தொழிலாளர்களுக்காகப் பிற்போக்கு எண்ணங்கொண்டோர்களையும், எதேச்சாதிகார ஆட்சியாளர்களை எதிர்த்தும் தொழிலாளர்களின் தோளோடு தோளுடன் இணைந்து பணி புரிந்து வருகிறது ஆனுல், நம்மைப்பற்றி சரிவர புரிந்து கொள்ள முடியாத கம்யூனிஸ்டுகள் நம்மைக் குறித்து கேவலமாகக் கேலி பேசி, நம் கொடியின் கீழ் ஒன்றுபட்ட தொழிலாளர்களின் ஒற்றுமையைக் கண்டு அச்சமுடன் அலறுகின்றனர். திராவிடத்தில் உள்ள தொழிலாளர்கள் நம் கொடியின் கீழ் அணிவகுத்து நிற்பதைக்கண்டு பொறுமையுடன்—போட்டியாக ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடத்துவதற்கு எண்ணுகின்றனரே தவிர, இதனுல் பாட்டாளி வர்க்கங்களைச் சிதறடித்து, தன் கட்சியை வளர்த்துக் கொள்ள தொழிலாளர்களைச் சாதகமாகப் பயன்படுத்துவது அவர்கள் அறியாமையே தவிர வேறு என்ன என்று கூறமுடியும்? மேலும், எந்த ஒரு சர்க்கார், தொழிலாளர்களை அடக்கி ஒடுக்கி நசுக்க நினைத்ததோ, அச்சர்க்கார் சார்பில் இணைந்துள்ள பிற்போக்கு தொழிற்சங்கங்களுடன் கூடிக்குலவி, துணை நாடி இம்மேதினம் கொண்டாடுவது, 'தொழிற் சங்கத்தின்' ஒற்றுமையைக் கூட்டுவதாக, நாம் எவ்வாறு கணிக்கமுடியும்? பிற்போக்கு தொழிற்சங்கத்தின் துணையைவிட நம் தி. மு. கழக துணை எவ்வளவோ சிறப்பாக இருக்குமல்லவா? இதை ஏன் கம்யூனிஸ்டுகள் புரிந்து கொள்ளவில்லை? இது மிகவும் கேவலமான உறவுதானே? இதைக் கூறினுல் நம்மீது கம்யூனிஸ்டுகள் சீறுகின்றார்கள். நாம், கழகத்தின் பலக்குறைவினுல்தான், தொழிற்சங்கத்தில் தி. மு. கழகம் புகுந்து தன்னை வலுப்படுத்திக் கொள்ள எண்ணுகிறது என்றும், நம்மால் என்ன செய்ய முடியும் என்று அவர்களே கேட்டுக் கொண்டு, நம் வளர்ச்சியைக் கண்டு இழித்துப் பேசுகின்றனர்.

"தி. மு. கழகம் 1949 செப். 17-ல் துவங்கியது; அப்போது ஓமந்தூரார் காங்கிரஸ் கட்சித் தலைவர் — தலைமை அமைச்சரும் கூட! அவரே நம் வளர்ச்சியைக் கண்டு, 'இப்படியே இவர்கள் வளர்ந்துகொண்டு போனுல், நம் சர்க்காருக்கு ஆபத்து' என்று உணர்ந்து, 'தி. மு. கழகத்தை விடாதே—பிடி', என்ற தோரணையில், அடக்குமுறை அம்பை நம் மீது எவினுர்

"1945—46-ல் 'ஆரிய மாயை' நூலை அண்ணு அவர்கள் எழுதினுர்; 1949-ல் அதற்காக வழக்கு; அதுவும் திருச்சி வழக்கு மன்றத்திலேதான் நடந்தது—தீர்ப்பு, 6-மாதம் சிறை; மக்கள் கொதித்

(4-ம் பக்கம் பார்க்க)

நெய்வேலி தொழிலாளர் பிரச்சினை

காமராசரிடம் முறையீடு

தமிழ் நாடு தொழிற் சங்கத்தின் பொதுச் செயலாளர் கே. டி. கே. தங்கமணியும், சென்னை சட்டசபை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் எம். கல்யாணசுந்தரமும் முதல் அமைச்சர் காமராசரைச் சந்தித்து, நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் சம்பந்தமான மனு ஒன்றைத் தந்திருக்கின்றனர்.

அந்த மனுவில், நெய்வேலி சுரங்க வேலையில் 600 தொழிலாளர்கள் அமர்த்தப்பட்டிருந்தனர் என்றும், ஆனுல், கடந்த ஜனவரியில் 300 பேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனரென்றும், அண்மையில் மீண்டும் சுமார் 50 தொழிலாளர்கள் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதாகவும் தெரிவித்து, வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு முதல் சலுகை காட்டி, அவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

மனுவைப் பெற்றுக்கொண்ட முதலமைச்சர், அகில இந்திய காங்கிரஸ் குழுக் கூட்டத்திற்குச் சென்று திரும்பிய பின்னர், தொழிலமைச்சருடன் கலந்து வேண்டுவன செய்வதாகக் கூறியிருக்கிறுர்.

பாலாறு நீர் தகராறு

டில்லியின் யோசனைகள்

சென்னை, மைசூர் ஆகிய இரண்டு மாகில சர்க்கார்களின் பிரதிநிதிகளும் தங்களிடையே விவாதம் நடத்தி, பாலாறு தண்ணீர்ப் பிரச்சினையிலுள்ள தகராறைத் தீர்த்துக்கொள்வதுவிரும்பத் தகுந்ததாகும் என்று, சென்னை மாகில சர்க்காருக்கு மத்திய சர்க்கார் யோசனை தெரிவித்துள்ளதாம்.

அவ்வாறு பிரதிநிதிகளிடையே நடைபெறும் விவாதத்தின்போது, மத்திய சர்க்கார் பிரதிநிதி ஒருவர் உடனிருக்க வேண்டுமென்று இருதரப்பினரும் கருதினுல், இந்திய சர்க்கார் அதற்கான அதிகாரி ஒருவரை நியமிக்கவும் ஒப்பம் தருவதாகவும் அறிவித்திருக்கிறது.

மேற்கண்ட இத்தகவல்கள் எல்லாம், டில்லி மக்கள் சபையில், திட்ட, நீர்ப்பாசன அமைச்சர் குல்ஜாரிலால் நந்தா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் அந்த அறிக்கையில், எல்லாப் பிரதேசங்களுக்கும் சரிசமமான அளவு அனுகூலம் கிடைக்கும் வகையில் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புது நீர்ப்பாசன விசைத் திட்டங்கள் சேர்க்கப்படுமென்றும், திட்டங்களைத் தோந்தெடுப்பதில் அவற்றை நிறைவேற்ற மாகில சர்க்கார்களின் திறமை பற்றியும் முக்கியத்துவம் தரப்படுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

பண்டிதரிடம் சுப்பிரமணியம் முறையீடு!

இலங்கை இந்தியர் துயரம் பற்றி பேசினுராம்!

புதுடில்லி, மே. 7—

இந்தியப் பிரதமர் பண்டித நேருவை சென்னை நிதியமைச்சர் சுப்பிரமணியம் சந்தித்து, இலங்கை இந்தியர் துயரங்கள் பற்றி கலந்தாலோசித்ததாகத் தெரிகிறது.

'காமன் வெல்த்' உறவு இலாகா செயலாளர் எஸ் டட் என்பாருடனும் அவர் இதுபற்றி ஆலோசித்ததாக அறிவிக்கப்படுகிறது.

துண்டு விழும்!

முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு செலவாகுமென வகுக்கப்பட்ட ரூ 2,050 கோடி மதிப்பீட்டில் ரூ. 650 கோடி துண்டுவிழுமென்று திட்டக்குழு துணைத் தலைவர் வி.டி.கிருஷ்ணமாச்சாரி தேசிய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறுர்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 9—5—'55 திங்கள்

இன்று போய், நாளை வா!

இந்தி—இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சி மொழியாக, தேசிய மொழியாக ஆக்கப்பட வேண்டுமென்பதில் வட நாட்டு ஏகாதிபத்தியவாதிகள், இந்தி மொழி வெறியர்கள் காட்டிவரும் பரபரப்பை நாட்டு மக்கள் அறிந்தே உள்ளனர்.

'இந்தி மொழி தெரிந்தால் தான் அகில இந்திய உத்தியோகங்களுக்குப்போட்டியிட முடியும்,' என்று இந்தியப் பேரரசின் கல்வி இலாகா பிறப்பித்த உத்தரவால், வட நாட்டு இந்தி வெறியர்களின் அவசரமும், ஏற்கனவே வளர்ந்துள்ள எதிர்ப்புகள் மேலும் வளர்ந்துவிடுவதற்கு முன்பே எப்படியேனும் இந்தியைத் திணித்துவிட வேண்டும் என்ற நோக்கமும் தெள்ளெனத் தெரிந்தது.

இந்தி மொழி தெரியாத மக்களுக்கு, தங்களின் போக்கு எத்தனை இன்னல் தரத்தக்கது என்பதை இந்தியப் பேரரசு அறியாத ஒன்றல்ல!

என்றாலும், அரசியல் சட்டத்தில், 'இப்போது ஆங்கிலம் இருக்கும் இடத்தில் இந்தியை உட்கார வைப்பதற்கு 15 ஆண்டுகள் எடுத்துக்கொள்ளலாம்,' என்று தரப்பட்டிருக்கும் கால வரையறையைச் சுட்டிக் காட்டி, 'தங்களின் போக்கு சரியானதே,' என்று வாதிடக் கிளம்புகின்றனர்.

ஆனால், ஒரு காலத்தில் தென்னாட்டு மக்கள் எந்த ஒரு அவசியத்திற்காகவும்கூட கற்கத் தேவையில்லாத இந்தி மொழியைக் கட்டாய பாடமாகப் புகுத்தி, அதை எதிர்த்த திராவிடரில் தாளமுத்து, நடராசன் என்ற இருஉயிர்களைக் குடித்து மகிழ்ந்த அதே ஆச்சாரியார் கூட, இப்போது, வட நாட்டவரின் இந்தி வெறியைச் சாடியிருப்பது குறித்து நாம் முன்பு ஒரு முறை எழுதியிருந்தோம்.

இந்தியப்பேரரசின் புதிய உத்தரவால், இந்தி மொழி வழங்காத இதர பகுதிகளில்—குறிப்பாகத் தமிழகத்தில் எழுந்துள்ள எதிர்ப்புணர்ச்சியை வட நாட்டவர்கள் ஓரளவு உணர்ந்து தான் வருகின்றனர்.

இப்போது காகா கலேல்கார் போன்ற கல்வி நிபுணர்களும், காமராசரும் 'இந்தி வெறியரின் போக்கிற்கு எதிராகத் தங்களின் கண்டனக் குரலை எழுப்பியுள்ளனர்.

காமராசர், தக்க தருணத்தில், இந்தியப் பேரரசின் புதிய உத்தரவு பற்றிக் கருத்தறிவிக்கும் அவசியம் வரும்போது, செயலில் ஈடுபடப்போவதாக அறிவித்திருக்கிறார்.

காகா சாகேப் கலேல்காரும், 'இந்தி மொழிக்காக வாதிடுவோர், முதல் முதலாக மாநில மொழிகள் தங்களுக்குரிய நியாயமான இடத்தைப் பெற அனுமதிக்க வேண்டும்; அதன் பின்னர்தான் — அதனால் மாநில மொழிகளுக்கு ஏற்படும் திருப்தியையும் பலத்தையும் கொண்டு தைழைக்கவும், அரசாங்க அலுவல் மொழியாக இருக்கும் ஆங்கிலத்துடன் போரிடவுமான ஆற்றல் இந்தி மொழிக்கு ஏற்படும்,' என்று இடித்துரைத்திருக்கிறார்.

காமராசரும், காகா கலேல்காரும் இந்த அளவாயினும் தங்கள் கண்டனத்தைத் தெரிவித்தார்களே என்பதில் பலருக்கு மகிழ்ச்சிதான்; அந்தப் பலரும் அதற்காக அவரைப் பாராட்டவும் முன்வருவர் என்பதில் ஆச்சரியமில்லை.

ஆனால், இப்போது இந்திப் பிரச்சினைக்குப்பரிகாரமாக 'இந்தியாவின் அரசியல் அலுவல் மொழியாக, இந்தி இடம் பெறுவதற்கு, அரசியல் சட்டத்தில் தரப்பட்டிருக்கும் கால வரம்பான 15 ஆண்டுகளை, இன்னும் ஐந்து அல்லது பத்து ஆண்டுகள் அதிகரித்துவிட்டால் போதும்,' என்று கூறுகிறார்கள்.

ஆங்கிலம் சுமார் 200 ஆண்டுகள் இந்த நாட்டில் முயற்சிக்கப்பட்டும், ஆட்சி மொழியாக நிலைத்திருந்தும் கூட, மக்களால் பரவலாகக் கற்றுக்கொள்ளப்பட்ட மொழியாக ஆக முடியவில்லை; அவ்வாறிருக்க இன்னும் 10 ஆண்டுகள் கழித்துவிட்டால் மட்டும் இந்தி, இந்த நாட்டவரின் சொந்த மொழியாகிவிட முடியுமா?

ஆங்கிலத்திற்கு, பிறரை தன்பால் ஈர்க்கும் 'வளங்கள்' பல இருந்தன; இந்திக்கோ ஏதுமில்லையே? ஆகவே, என்றும் இந்த நாட்டவருக்கு, இந்தி அன்னிய மொழியாகத்தான் இருக்க முடியும்.

ஆகவே, இந்தியை இந்த நாட்டவர் ஏற்றுக்கொள்வதற்கு இன்னும் அவகாசம் வேண்டும் என்று கேட்பது பரிகாரமாக முடியாது.

அடிமை கொள்ளவரும் ஆதிக்கக்காரனிடம், 'இன்று போய் நாளை வா' என்று கூறுவதற்கொப்பத்தான் இருக்கிறது—அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள கால வரம்பை அதிகரிக்க வேண்டுமென்பதும்!

என்றாலும், இந்தி வெறியரின் மிதமிஞ்சிய 'போக்கினை' தற்காலிகமாகவாவது கட்டுப்படுத்த அரசியல் சட்டத்தில் உள்ள கெடுவை நீடிப்பது தான் பரிகாரம் என்றால், அதை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதில் தவறில்லைதான்!

'சோஷலிசம் பேசினால் போதாது!'

'காங்கிரஸ் ஆட்சியாளரே, வேலை செய்வீர்!'

பம்பாய், மே. 6—

"திறப்பு விழாக்கள் போன்ற வெளி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருப்பதைக் காட்டிலும், சர்க்கார் அலுவலகங்களிலுள்ள 'பைல்'களைப் புரட்டும் வேலையில் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் ஈடுபட்டால் நாட்டிற்கும், வரி கொடுக்கும் மக்களுக்கும் நன்மை செய்தவராவார்கள்,"

என்று, ஆர். டி. அஷார் என்பவர், 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற ஆங்கில இதழில் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

"சோஷலிசம் என்று இவர்கள் பேசுவது உண்மை என்றால், திறப்பு விழாக்கள் போன்ற பெருமைகளை திறமையான ஒரு விவசாயி, நாணயமான ஒரு குமாஸ்தா, நல்ல பணியாற்றும் தொழிலாளர் ஆகிய யாராவது ஒருவரிடம் தந்து விடுவது நல்லது,"

என்று, அவர் மேலும் எழுதியுள்ளார்.

"தனிப்பட்டவர்களின் வருமானத்திற்கு முற்றுப் புள்ளி வைக்கப் போகிறோம் என்று காங்கிரஸ் ஆட்சியாளர்கள் கூறுகிறார்கள்; ஆனால், அதே நேரத்தில் வருமான வரி அலுவலகங்களுக்கென்று பெரும் கட்டிடங்களைக் கட்டுகிறார்கள்," என்று, அவர் மேலும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கோவாவை மறந்தது ஏன்?

"பார்மோசா பிரச்சினை குறித்து பிரமாதமான அளவில் அக்கரை காட்டுகின்ற அதே நேரத்தில் உலக நாடுகள், கோவா பிரச்சினையில் அக்கரை காட்டாமல் மௌனமாக இருப்பதுதான் வியப்பிற்குரியதாக இருக்கிறது; பெரும் 'புரட்சி'கள் செய்தாலொழிய அந்தப் பிரச்சினையின் அவசரத்தையும், முக்கியத்துவத்தையும் பிறர் உணர்ந்துகொள்ள மாட்டார்களோ என்று கூட ஐயுற வேண்டியதாக இருக்கிறது; இவ்வளவு காலமும் நாமும் மிகப் பொறுமையுடன் தான் இருந்து வந்தோம்; ஆனால், பொறுமைக்கும் குறிப்பிட்ட ஒரு எல்லையுண்டு; அதன் பின்னர் தேசத்தின் சுயமரியாதையும், மனித சமூக 'சகிப்புத்' தன்மையும் நாம் வாளாவிருக்க அனுமதிக்க மாட்டா."

இவ்வாறு, பிரஜா சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் அசோக் மேத்தா, பத்திரிகை நிருபர்களிடை பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"கோவா நிலைமை மிக மோசமானது—சகித்துக்கொள்ள முடியாத ஒன்று; அது அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று" என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாக் - ஆப்கன் தகராறு

கோரிக்கை நிராகரிப்பு

ஆப்கானிஸ்தானத்திலிருந்த பாகிஸ்தான் தூதுவராலயத்தில் பறக்கவிடப்பட்டிருந்த பாக்.கொடி 'அவமதிக்கப்பட்டதை' யொட்டி, இத்திங்கள் 15-ந் தேதிக்குள் ஆப்கன் சர்க்கார் மன்னிப்புக் கோர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு பாகிஸ்தான், இறுதி எச்சரிக்கை ஒன்று அனுப்பியிருந்தது.

ஆப்கன் சர்க்கார், இந்தக் கடிதத்தை நிராகரித்து விட்டதாம்.

"ஆப்கன் சர்க்காரும், ஆப்கன் மக்களும் எந்தவிதமான மிரட்டலுக்கும் ஒரு நாளும் பணிந்துவிட மாட்டார்கள்; இதனால்தான் ஆப்கனிஸ்தானத்தில் ஓரளவுக்குப் படை திரட்டலுக்குக்கூட உத்தரவிடப்பட்டிருக்கிறது" என்று ஆப்கன் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார். அவர் மேலும், இராணுவ ஊழியத்திற்கு இலாயக்கான எல்லாருமே அழைக்கப்படவில்லை என்றும், ஒரு குறிப்பிட்ட வயதுக் கிரமமுள்ளவர்கள்தான் அப்படைக்குத் திரட்டப்படுகிறார்கள் என்றும் குறிப்பிட்டார்.

தற்போது ஆப்கானிஸ்தானத்திலுள்ள நிலைமைகள் காரணமாக பாகிஸ்தானிகள் யாரும் ஆப்கானிஸ்தானத்திற்குப் போகவேண்டாமென்று பாகிஸ்தான் சர்க்கார் தெரிவித்திருக்கிறதாம்.

ஆஜ்மீரில் அதிசய திருமணங்கள்

ஆறுமாதக் குழந்தை மணமகனான கொடுமை!

ஆஜ்மீர், மே 7—

சென்ற வாரத்தில் ஆஜ்மீர் பகுதிகளில் 3000-க்கு மேற்பட்ட திருமணங்கள் நடைபெற்றனவாம்.

இப்படித் திருமணம் செய்து கொண்டவர்களில் பலர் திருமணம் என்றால் என்னவென்றே புரியாதவர்கள்.

மாப்பிள்ளைகள் மணப் பெண்களைப் பற்றிக் கவலையுறாது, மணிச் சத்தம் கேட்டதைப் பார்த்து, மகிழ்ந்து கொண்டிருந்தார்கள். பெரும்பான்மையான தம்பதிகள், இளம் வயதினரல்ல—குழந்தைகள்!

ஓராண்டே நிறைவுற்ற பெண்ணுக்கும்—ஆறு மாதமே ஆன ஆண் குழந்தைக்கும் திருமணம் நடைபெற்றதாம்!

3 ஆண்டுகளில்!

இந்தியாவில் வாக்காளர்கள் அதிகரிப்பு

சென்ற 3 ஆண்டுகளுக்குள்ளாக இந்தியாவில், வாக்காளர்களின் எண்ணிக்கை 1 கோடி 13 லட்சம் அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இப்போது எடுக்கப்பட்டுள்ள கணக்கின்படி, தற்போதைய மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 18 கோடி 45 லட்சம்: சென்ற 1951 இறுதியில் இந்தத் தொகை 17 கோடி 32 லட்சமாகக் குறைந்துதானிருந்தது. இந்தத் தொகையின் அடிப்படையில்தான் சென்ற பொதுத் தேர்தலும் நடைபெற்றது.

சென்ற பொதுத் தேர்தலில், சென்னை மாகிலத்தின் மொத்த வாக்காளர்களின் தொகை 2 கோடி 69 லட்சமாக இருந்தது. இப்போது—சென்னை மாகிலமும் ஆந்திர மாகிலமும் பிரிக்கப்பட்ட பிறகு, சென்னையின் தொகை 1 கோடி 99 லட்சமாகவும், ஆந்திராவின் தொகை 1 கோடி 13 லட்சமாகவும் இருந்துவருகிறது.

ரூ. 5,600 கோடி மதிப்பீட்டில்!

'இரண்டாவது அபிவிருத்தித் திட்டத்தின் அடிப்படை அமைப்பின் நோக்கம், தேசிய வருமானத்தை ஆண்டுக்கு 5 சதவிகிதம் அதிகரிப்பதும், 100 அல்லது 120 லட்சம் பேருக்கு வேலை கொடுப்பதுமேயாகும்; திட்டத்திற்கான மொத்த முதலீடு ரூ. 5,600 கோடி என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது; பொதுப்படையாக திட்டத்தை வைத்துக் கொண்டுதான் நாம் அதன்பேரில் பேச வேண்டும்," என்று புதுடில்லியில் நடைபெற்ற தேசிய அபிவிருத்திக் குழுவின் 4-வது கூட்டத்தில் பேசுகையில் நிதி அமைச்சர் சி. டி. தேஷ்முக் கூறியிருக்கிறார்.

அரைமணியில் 3,000 மைல் பிரயாணம்!

"அணுசக்தி பற்றிய ஆராய்ச்சிகள் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டே வருவதினின்றும், லண்டனிலிருந்து 3,000 மைல் தொலைவிலுள்ள நியூயார்க்கிற்கு, அணுசக்தி 'சப்மரைன்' நீர் மூழ்கிக் கப்பல் மூலம் அரை மணி நேரத்திற்குள் போய்ச் சேர்ந்துவிடுவது சாத்தியமாகலாம்" என்று, அமெரிக்காவில், 'நாட்டிலியஸ்' எனும் அணுசக்திக் கப்பலைக் கட்டிய ஜான் ஹாப்கின்ஸ் என்பவர் கூறியிருக்கிறார்!

"சென்னையிலிருந்து பிரிந்து போக விரும்பவில்லை"

மலபார், கன்னட மக்கள் பற்றி காமராசர்

"மலையாளம், தென்கன்னடம் ஆகிய மாவட்டங்களில் வாழும் மக்கள், சென்னை மாநிலத்திலிருந்து பிரிந்து செல்லும் நோக்குடன் இல்லை,"

என்று, சென்னை முதலமைச்சர் காமராசர் கூறியிருக்கிறார்.

"மலபார், தென் கன்னடம் ஆகிய பகுதிகளில் இருக்கிற சில தலைவர்கள்தான் பிரிவினை பற்றி கவனம் செலுத்துகிறார்கள்," என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

"மலபாருக்கு சென்னை மந்திரி சபையில் இடம் இல்லையே?" என்று கேட்டபோது, அமைச்சர், "'இல்லையே' என்ற குறையை மக்கள் உணர்ந்து கவலையுறுவதாகத் தெரியவில்லை; இப்பிரச்சினையும் தலைவர்கள் உள்ளத்தில் தான் இருக்கிறது," என்று குறிப்பிட்டார்.

திராவிடத்தின் மற்றொரு வளம்

கிருஷ்ணா மாவட்டத்திலிருக்கும் ஜக்கையப்பேட்டை எனும் இடத்திற்கு அருகில் 25 கோடி டன் அளவிற்குச் சுண்ணாம்புக் கல் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம். இந்த சுண்ணாம்புக் கல் 'போர்ட்லாண்டு சிமெண்ட்' உற்பத்திக்கு உபயோககரமானது என்று கூறப்படுகிறது.

மே தின விழா...

(3-ம பக்கத்தின் தொடர்ச்சி)

துக் கூறி நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

பொள்ளாச்சி

5-5-55 மாலை 4-மணிக்கு நகர முக்கிய தெருக்கள் வழியாக சைக்கிள் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது. மாலை 7-மணிக்கு திருவள்ளுவர் திடலில் தோழர் அ. ச. பாலு தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் பி. என். இராமானுசம், பி. கே. முத்து, க. துரைக்கண்ணன் ஆகியோர் சிறிதுநேரம் பேசியபின், தோழர் என். வி. நடராசன் மே விழா பற்றியும், தற்கால அரசியல் நிலை பற்றியும் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினர்.

தோழர் என். வி. நடராசன் அவர்களுக்கு பல சங்கங்களின் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன. இறுதியில் தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன.

திண்டுக்கல்

1—5—55 மாலை 5 மணிக்கு, வ. உ. சி. திடலிலிருந்து தோழர் பி. இராசா தலைமையில் கழகத் தோழர்கள், தொழிலாளர்கள் ஆகியோரடங்கின சைக்கிள் ஊர்வலம் புறப்பட்டு, நகரின் முக்கிய தெருக்களின் வழியாக வந்து திடலை அடைந்தது. இரவு 7 மணிக்கு, தோழர் என். முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாப் பொதுக்கூட்டத்தில் தோழர் பி. சமதர்மம் சிறிது நேரம் பேசிய பின், தோழியர் சத்தியவாணி முத்து அம்மையார் 'மே தினமும், தி. மு. கழகமும்' என்பது பற்றியும், 'மாதிரி சோஷலிசமும் - நேருவும்' என்பது பற்றியும், திராவிட நாடு பிரிவினை அவசியம் பற்றியும், அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகிய மூன்று துறைகளிலும் பணிபுரியும் ஒரே இயக்கம் தி. மு. கழகம்தான் என்றும் குறிப்பிட்டு நீண்டதோர் சொற்பொழிவாற்றினர்.

கழகச் செய்திகள்

நாகை தி. மு. கழகம்

1—5—55 மாலை 5 மணியளவில், கழக இல்லத்தில், தோழர் எஸ். கல்யாணம் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில், பொதுச் செயலாளராகக் கடந்த ஆறாண்டு காலமாகப் பணியாற்றி தற்போது பதவியிலிருந்து விலகிய முன்னாள் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களையும், புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களையும், தி மு. கழகப் பொதுக் குழுவிற்கு நாகை வட்டப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் ஏ சந்தானம் அவர்களையும் பாராட்டித் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டதுடன், 15—5—55ல் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், நாகை தி மு கழகச் சார்பில் இயங்கிவரும் அழகிரி சொற்பயிற்சி மன்றப் பொறுப்பாளராகத் தோழர் ஏ. எஸ். பாண்டியனை நியமித்தும் முடிவு செய்யப் பட்டது.

மதுரை நகர தி. மு. கழகம்

1—5—55 மாலை 3-30 மணிக்கு மதுரை நகர் தி மு கழகச் செயற் குழுக் கூட்டம், தோழர் பி. கே. சேதுராமன் தலைமையில் நடைபெற்றபோது, தி. மு. கழகப் புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குப் பாராட்டுதல் தெரிவித்தும், 15-5-55 காலை 7 மணிக்கு, மதுரை இரயில் நிலையத்தில், பொதுச் செயலாளருக்கு வரவேற்பும், மாலையில் தேநீர் விருந்து, ஊர்வலம், பொதுக் கூட்டம் ஆகியவை நடத்துவதெனவும், நகர கழகத்துக்குப் பொறுப்பாளராகத் தோழர் பாண்டி அவர்களை நியமித்தும், கழக வரவு-செலவு கணக்குகளை அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் பரிசீலிப்பதெனவும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

உசிலம்பட்டியில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

1—5—55 மாலை 6 மணிக்கு, இவ்வூர் ஊர்மந்தை திடலில், தோழர் பி. எஸ். மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில், தோழர்கள் அ. உசிலைத்தம்பி, ஏ. பி. ஓ அரிராமன், ஏ. பி. குமார் ஆகியோர் கழகக் கொள்கைகளை விரிவாக எடுத்துரைத்தனர்.

கட்டிமேடு தி. மு. கழகம்

1—5—55 மாலை 5 மணிக்கு, தோழர் அ. ப முகம்மது இல்லத்தில் தோழர் எஸ். மூர்த்தி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழு கூட்டத்தில் தி. மு. கழகப் புதிய பொதுச் செயலாளராக இரா. நெடுஞ்செழியன் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்குப் பாராட்டுதல் தெரிவித்தும், மே தின விழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

பொன்மலை— மேலக்கற்கண்டார்கோட்டை தி. மு. கழகம்

2—5—55 இரவு 7 மணிக்கு, கழகக் கட்டிடத்தில் தோழர் கே. துரைராஜ் தலைமையில் நடைபெற்ற நிர்வாகக் குழு உறுப்பினர் கூட்டத்தில் 16—4—55-ல் நடைபெற்ற 4, 5-வது ஆண்டு விழா வரவு-செலவு கணக்கு சரிபார்த்து ஒத்துக்கொள்ளப்பட்டதுடன், ஆண்டு விழாவை சிறந்த முறையில் நடத்திக் கொடுத்த ஆண்டு விழா குழுவினரையும், தி. மு. கழகப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இரா. நெடுஞ்செழியன் அவர்களையும் பாராட்டியும் மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ஆத்தூர் (சேலம்) தி.மு.க.

2—5—55 இரவு 8 மணிக்கு நடைபெற்ற தி மு கழகச் செயற் குழுக் கூட்டத்தில், 14—5—55ல் பொதுக்கூட்டம் நடத்துவது எனவும், அன்று இரவு 'கல்லறை'—நாடகம் நடத்துவதற்கு குறள் கலைக் கழகத்தாருக்கு அனுமதி தருவதெனவும் முடிவு செய்தபின், கடந்த ஆறு ஆண்டுகளாகப் பொதுச் செயலாளராக விருந்து பணியாற்றிய அண்ணா அவர்கட்கும், பொதுக் குழுவிற்கும், புதிய பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கும் பாராட்டுதல் தெரிவித்துக் கொண்டும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

செங்காட்டுப்பட்டி தி.மு.க.

4—5—55 இரவு 8½ மணிக்கு, இவ்வூர் அண்ணா அறிவகத்தில் தோழர் பெ. மு. அரங்கசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், புதிய பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியனையும், முன்னாள் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்களையும் பாராட்டியும், மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

திருமங்கலம் தி. மு. கழகம்

4—5—55ல் நடைபெற்ற நகர தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், மே விழாவை யொட்டி செலவான தொகையை நீக்கி, வசூலான தொகை நகர தி. மு கழகத்திடம் கொடுக்கப்பட்டது. பின்னர் 29—5—55ல் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

திண்டுக்கல் தி. மு. கழக ஊழியர்கள் கூட்டம்

1—5—55 காலை 10-30 மணியளவில், நகர தி. மு கழக அலுவலகத்தில், தோழர் பி சமதர்மம் தலைமையில் நடைபெற்ற கழக ஊழியர்கள் கூட்டத்தில், தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார், கழக ஊழியர்களின் கடமை குறித்தும், ஆற்ற வேண்டிய பணிகள் பற்றியும், ஊழியர்கள் எவ்விதக் கருத்து வேறுபாடின்றி தி. மு. கழகக் கொள்கைகள் வளர்ச்சி பெற உற்சாகமுடன் உழைக்க வேண்டுமென்றும், ஜனநாயக முறைக்குச் சூந்தகம் விளைவிக்காத முறையில் ஊழியர்கள் நடந்துகொள்ள வேண்டுமென்றும், இந்த நகரத்தைப் பொறுத்தவரை கழகத் தோழர்கள் ஒன்றுபட்டுச் செயலாற்றி வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைவதாகவும், தொழிலாளர், விவசாயிகள் பகுதிகளுக்கு சென்று அவர்கள் குறைகள் தீரப் பாடுபட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். மற்றும் தோழர்கள் என். முத்து, ஏ. சுப்பையா, பி. இராசா ஆகியவர்கள் சிறிது நேரம் பேசினர்.

ஏனங்குடி தி. மு. கழகம்

30—4—55 இரவு 8 மணியளவில், தோழர் மா. சம்பந்தம் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில் புதிய பொதுச் செயலாளராக இரா. நெடுஞ்செழியன் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பாராட்டுதல் தெரிவித்தும், வேறு பல பிரச்சினைகள் குறித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புஞ்சைத்தலையூர் தி. மு. க.

28—4—55 இரவு 9 மணிக்கு தோழர் கே. சைனுமுகமது தலைமையில் நடைபெற்ற கழகச் செயற் குழுக் கூட்டத்தில், சென்ற ஆண்டு கழக வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்து ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர், மற்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

தாத்தையங்கார்பேட்டை தி. மு. கழகம்

5—5—55 மாலை 6-15 மணிக்கு கழகச் செயற் குழுக் கூட்டம் தோழர் எம். எஸ். என். இராசன் தலைமையில் நடைபெற்றபோது, புதிய பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை பாராட்டி வரவேற்றும், இதுவரை பொதுச் செயலாளராக இருந்து அரும்பணியாற்றிய அண்ணா அவர்களுக்கு நன்றி தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்து உள்ளூர் கிளைக் கழகச் செயற் குழு உறுப்பினர்கள் மாத சந்தாவாக அணா இரண்டு தருவதென்று தீர்மானிக்கப்பட்டது விரைவில் முசிறிவட்ட தி. மு. கழகம் அமைப்பதென்றும் முடிவு செய்யயபட்டது.

பம்பாய் மாவட்ட தி. மு. கழகக் கூட்டம்

24—4—55 மாலை 6½ மணிக்கு, குடியரசு நிலையத்தில் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெற்றபோது, பம்பாய் மாவட்ட தி மு. கழகம் 'பம்பாய் திராவிட முன்னேற்றக் கழகம்' என்று மாற்றப்பட்டது சட்ட திட்டச் செயலாளராக தோழர் த. மு பொற்கோ தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த கூட்டம் மே திங்கள் 15-ம் நாள் ஞாயிறு காலை 8-30 மணிக்கு காந்திவ்லியில் கூடுவதென முடிவு செய்யப்பட்டது.

சாத்தூர் தி. மு. கழகம்

4—5—55 இரவு 10½ மணிக்கு நகர் கழக செயற்குழு கூட்டம் செயலாளர் இல்லத்தில், திரு பா. அண்ணாமலைசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது, புதிய பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை பாராட்டி தோழர் ஆர். பி. சன்யாட்சென் சிறிது நேரம் பேசிய பின்னர் பாராட்டுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்து, கே. ஆர். ஆர். குழுவினர் நாடகம் ஒன்றை கழக நிதிக்காக நடத்துவதெனவும், மே தின விழா பொதுக் கூட்டத்தை விரைவில் நடத்துவதெனவும், 9—4—55ல் நடைபெற்ற சம்பத் கூட்ட வரவு-செலவு கணக்குகளைப் பரிசீலித்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

சென்னிமலை தி. மு. கழகம்

4—5—55 இரவு 9 மணிக்கு கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், தோழர் ரா. கிருட்டிணன் தாயர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தோழர் சி. என். சென்னியப்பன் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப் பட்டும், மே திங்கள் 3-ம் நாள் நடைபெற வேண்டிய மே விழா (தோழர் என். வி. நடராசன்) பொதுக்கூட்டம் மழையின் காரணமாக தடைபட்டதால், அக் கூட்டத்தை 14—5—55ல் நடத்துவதென இக்குழு முடிவு செய்தும், மாநில மாநாட்டுக்கு மாவட்டக் குழு அறிக்கைபடி ரூ. 30 அனுப்புவதெனத் தீர்மானித்தும் முடிவுகள் செய்யப்பட்டன.

பெரியகுளம் தி. மு. கழகம்

3—5—55-ல், செயலாளர் ஏ எஸ். அனிபா தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தமைக்குப் பொதுக் குழு உறுப்பினர்களைப் பாராட்டியும், பொதுச் செயலாளராயிருந்து பணியாற்றிய அண்ணாதுரை அவர்களுக்கு நன்றியறிதலும் தெரிவித்துக்கொள்ளப் பட்டதுடன், தோழர் என். பழனிவேல் செல்வன் வீரமணி இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்தும், ஏப்ரல் திங்கள் 6—4—55 முதல் 30—4—55 முடிய உள்ள வரவு-செலவுகளைத் தணிக்கை செய்து ஒப்புக்கொண்டும், கழக வளர்ச்சிக்காகச் சிறப்பு சொற்பொழிவுக் கூட்டம் கூட்டுவதற்காகவும் அதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கவும் செயலாளருக்குத் தனி அதிகாரம் அளிக்கப்பட்டும், குறைந்தது மூன்று திங்களுக்கு ஒருமுறையாவது பொதுக் கூட்டம் கூட்டுவதென்றும், செயற் குழு உறுப்பினர்களுக்குச் சொற்பயிற்சியளிப்பதென்றும் அதற்கான பொறுப்பை தோழர் வெற்றிச் செல்வனிடம் அளித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அன்று இரவு ஒன்பதரை மணியளவுக்கு தோழர் சி பி. சிற்றரசு அவர்கள் கழகப் பணிமனையைப் பார்வையிட்டு, பாராட்டுதல் வழங்கினர்.

திருப்பத்தூரில் மே விழா

"வைக்கம் வீரர் வாசகசாலை என்பது, மற்ற இடங்களில் உள்ளதைப்போல் பத்திரிகைகள் படிக்கும் இடமாக மட்டும் இருக்கவில்லை; ஓர் நல்ல ஆரம்பப் பள்ளியையும் அது நடத்திவருகிறது. 'இது நன்ருக நடக்கிறது' என்பதற்காக ஏற்பட்ட வைதீகர்களின் எதிர்ப்பு அளவிட முடியாதனவாகும்."

"இருபத்தைந்து ஆண்டுகட்குமுன் காங்கிரஸ்காரனாகவே நான் இங்கு வந்திருக்கிறேன். அன்று காங்கிரஸ் தலைவராக இருந்த பெரியார் இராமசாமி ஞாபகமாகவே வைக்கம் வீரர் வாசகசாலை நிறுவப்பட்டது; ஆனால் பெரியார், பின்னர் சிறந்த சீர்திருத்தக்காரராய் மாறிய காலத்தில், வாசகசாலை நிர்வாகிகளும் அவ்விதமே மாறிவிட்டார்கள். இன்று பள்ளிக்கூடத்தைத் தாங்களே நடத்திக்கொண்டு, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த இளைஞர்களிடம் வைக்கம் வீரர் வாசகசாலையை ஒப்புவித்திருக்கிறார்கள்; அடுத்த ஆண்டு வெள்ளி விழாவை அவர்கள் மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். இதில் கட்சி வேறுபாடுகள் எதுவுமின்றி யாவரும் பாடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

—இவ்வாறு, திருப்பத்தூர் தெம்மாப்பட்டில், 1—5—55 அன்று மாலை வைக்கம் வீரர் வாசகசாலை சார்பில் நடைபெற்ற மே விழா, வாசகசாலையின் 25-ம் ஆண்டு நிறைவு விழா ஆகியவற்றிற்குத் தலைமை தாங்கிய தோழர் எஸ். வி. லிங்கம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

தோழர் எஸ். வி. லிங்கம் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"தீண்டாமை, நுழையாமை ஆகியவற்றை எதிர்த்துப் போரிட்டவர் வைக்கம் வீரராகும்; தீண்டாமை ஒழிப்பு இன்று நாட்டில் சட்டமாக்கப்பட்ட போதிலும், முதன் முதலில் 'தீண்டாமை' ஒழிக்கப்பட வேண்டும்—'சமதர்மம்' தழைக்க வேண்டும்—என்று தமிழகத்தில் பாடுபட்ட இயக்கம் சுயமரியாதை இயக்கமேயாகும்.

'சமதர்ம'த்தை நாட்டுமக்களுக்கு எடுத்துச் சொல்லிய நாம்தான் 'பொது உடைமை'யையும் எடுத்துரைத்தோம். அது போன்றுதான், 'சோஷலிச'த்தையும், தொழிலாளர் இயக்கத்தையும், விவசாயப் போராட்டத்தையும், கிராமப் பஞ்சாயத்து போன்றவைகளையும், இந்நாட்டுக்கு நாம் அறிமுகப்படுத்தினோம். அத்துடன் மட்டுமல்லாமல், 'மே தினம்' என்பதை பொது மக்களுக்கு எடுத்துக்காட்டியதும் நாம்தான்.

"இந்திய நாட்டில் தொழிலாளர் இயக்கத்தை முதலில் உண்டாக்கி, அதை அமைப்புடன் எடுத்துக் காட்டிய பெருமை தென்னிந்தியத் தலைவர்களுடையதேயாகும். இதைப் போலவே, ரஷ்ய நாட்டில் பொதுவுடைமை சர்க்கார் உண்டாவதற்கு முன்னமேயே, இங்கு பொதுவுடைமை மாநாட்டைக் கூட்டி சிறை சென்ற வீரர் காலம் சென்ற தலைவர் சிங்காரவேலராவார்.

"இவ்விதம் உலகில் எந்த முற்போக்குக் கருத்துக்கள் அரும்பும் போதும், அதை எடுத்துக்காட்டி, அதை நமது நாட்டுக்கு உகந்த முறையில் செய்யவேண்டுமென்பதில் நாம் என்றும் தவறியதில்லை."

பின்னர், தோழர்கள் கண்ணதாசன், டி. கே. சீனுவாசன் ஆகியோர் இயக்கக் கருத்துக்களைப் பற்றியும், மே விழா பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

★

மற்ற ஊர்களில்...

ஆலந்தூர்

4-5-55 மாலை 6-30 மணிக்கு தி. மு. கழகச் சார்பில் மே தின விழாப் பொதுக்கூட்டம் தோழர் சோ. பாலன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கே. எஸ். அருணாசலம். வி. முனுசாமி, முகவை ஆர். எஸ். பாண்டியன், கே. ஏ. மதியழகன் ஆகியவர்கள் 'மே தின விழாவை ஏன் நாம் கொண்டாடுகிறோம்,' எனும் விளக்கமும், வடநாட்டு ஆதிக்கத்தினின்று பிரிய வேண்டிய அவசியத்தைப் பற்றியும் பேசியபின், தீர்மானங்கள்சில நிறைவேற்றப்பட்டன.

வேப்பஞ்சேரி

1-5-55 இரவு 7-மணியளவில், திருத்துறைப்பூண்டி வட்ட தி. மு. கழகச் சார்பில், மார்கெட் மைதானத்தில், தோழர் க. சண்முகம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் இரா. அழகரசன், மு அ. செங்குட்டுவன், டி. எஸ். கல்யாணசுந்தரம், என். ஆர். இராசகோபாலன், இரா. நடராசன் ஆகியோர் பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றினர்.

திருமங்கலம்

1-5-55ல், இரயில் நிலைய வழி வீதியிலுள்ள தோழர்கள் ம. கலைநேசன், ச. இசைமுரசு ஆகியவர்களின் கடைகளில் நகர் செயலாளர் தோழர் மு. அ. இரசாக் அவர்களால் கழகக் கொடி ஏற்றிவைக்கப் பட்டு, இனிப்புகள் வழங்கப்பட்டது.

கடையநல்லூர்

3—5—55 இரவு 8 மணிக்கு மறுமலர்ச்சி திடலில், தோழர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். எஸ். சாகுல் அமீது, ஆ. திராவிடமணி, சே. எஸ். சந்தானம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்ட இறுதியில் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பெங்களூர்—அக்கிபேட்டை

1—5—55 காலை 10 மணிக்கு, பெங்களூர்— அக்கிப்பேட்டை தி. மு. கழகப் பணிமனையில், தோழர் ஜி. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்ற மே விழாக் கூட்டத்தில், தோழர்கள் வே. இளஞ்சேரன், ஆர். ஆறுமுகம், சி. உலகநாதன், மு. சோ. வேந்தன், பி. வி. பொன்னுரங்கம், ஜே. கனகசுந்தரம் ஆகியோர் மே தின விழா கொண்டாடப்பட வேண்டியதின் அவசியத்தைப் பற்றி சொற்பொழிவாற்றினர்.

மூணார்

1—5—55ல் இவ்வூரில், தோழர் ஜே. டேவிட் தலைமையில் நடைபெற்ற விழா பொதுக்கூட்டத்தில், தோழர்கள் எஸ். அப்பாவு, பி. எம். பொன்னுச்சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். தோழர் பொன்னுசாமி பேசுகையில், இந்திய சர்க்காரின் ஐந்தாண்டுத் திட்டத்தினால் வடநாடு வாழ்வு பெறுவதையும், தென்னாடு தாழ்வுறுவதையும் விளக்கிக் கூறினார். பின்னர் தோழர் எஸ் அப்பாவு தி மு. கழகத்தின் இலட்சியம், திட்டங்கள், நடைமுறைச் செயல்கள் ஆகியவை குறித்தும், திராவிடத் தொழிலாளி மக்கள் வாழ்வுற, தி மு கழகம் பாடுபட்டு வருவதையும் எடுத்

(2-ம் பக்கம் பார்க்க)

தோழர் ஈ. வெ. கி. சம்பத் முழக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெழுந்தனர்; அன்று மாலையே திருச்சியில் பொதுக்கூட்டம் — கண்டனம் தெரிவித்தது; மற்றும் சிற்றூர், பேரூர்களிலும் கண்டனக் கூட்டம்; ஆட்சியாளரின் அக்கிரமச் செயலைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றி சர்க்காரை எச்சரித்தது; ஓமந்தூரார் கண்டார்—நடுங்கினர்; ஆனால், உடனே, சட்டத்தில் இல்லாத முறையைக் கையாண்டார். 6 மாதத் தண்டனை விதிக்கப்பட்டு, கைது செய்து, சிறை பிடித்த (நாம் கருணை மனு எதும் போடாமலே), பத்தே நாட்களில் மக்களின் எதிர்ப்பு உருவாவதைக் கண்டு, அண்ணா அவர்களை விடுதலை செய்தது; ஆனால், இன்று, ஓமந்தூரார் எங்கே— நாம் எங்கே? ஓமந்தூரார், இன்று, வடலூர் இராமலிங்க அடிகளார் அருள் பெற காங்கிஸ் (கதர்) சட்டையை — காவி சட்டையாக மாற்றிக் கொண்டிருக்கின்றார்; நாம் வளருகிறோம்—அழியவில்லை

"அடுத்து குமாரசாமி ராஜா வந்தார்; மதிப்புக்குரிய அவரும் பரிதாபத்துக்குரியவரானார்: 'நாம் நாட்டில் நடமாடினால் காங்கிரசுக்கும், மதவாதிகளுக்கும், முதலாளிகளுக்கும் 'ஆபத்து' என்று எண்ணினார்; நம்மை நசுக்கத் திட்டம் தீட்டினார். நாடகத் தடை— புத்தகத் தடை — சினிமாவுக்குத் தடை—கூட்டத்திற்குத் தடை— அதிகார அம்பை எடுத்து வீசினார். தோழர் கருணாநிதியின் 'தூக்கு மேடை' நாடகத்துக்குத் தடை; தோழர் சி. பி. சிற்றரசுவின் 'போர்வாள்' நாடகத்துக்குத் தடை; தோழர் பாரதிதாசனின் 'இரணியன்' நாடகத்துக்கு— கவிதைக்குத் தடை; புலவர் குழந்தை எழுதிய 'இராவண காவிய'த்துக்குத் தடை!

"மேலும், திருச்சி மாவட்டத்தில் நாரணமங்கலத்தில் கூட்டம் நடத்துவதற்குத் தடை போட்டார் —144 அம்பை வீசினார்; ஏதோ சில பொறுப்பற்ற காங்கிரஸ்காரர்களின் கையொப்ப வேண்டுகோளுக்கிணங்கி, தடை விதித்து; 'பேசாதே' என்றார்; 'மீறினால், சிறைவாசந்தான்' என்றார்; இருப்பினும், நம் தோழர்கள், வானமாமலை, மற்றும் நாரணமங்கலத் தோழர்கள் 6 பேர் தடையை மீறி கூட்டம் நடத்தினார்கள்; அவர்கள் கைது செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்று, 6 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டனர்.

"குன்றத்தூரில் தோழர் என். வி. நடராசன் பேசவிருந்த பொதுக் கூட்டத்திற்குத் தடை; மக்களை நோக்கி போலீஸ் பட்டாளம் பாய்ந்தது; மக்கள் மிரளவில்லை; கூட்டத்தை விட்டு நகர மறுத்தனர்; தடியடியும், துப்பாக்கிப் பிரயோகமும் நடைபெற்று. படுகாயம் விளைவிக்கப்பட்டது. தோழர் நடராசன் கைது செய்யப்பட்டார்; தோழர்களுக்குக் கைவிலங்கு பூட்டப்பட்டு, அழைத்துச் செல்லப்பட்டனர்; 'இதோடு தி.மு. கழகம் ஒழிந்தது,' என அவர் எண்ணினார்; 'அழிந்து விடும்' என்று கனவு கண்டுகொண்டிருந்தார்; ஆனால், இன்று அவர் எங்கே? நாம் எங்கே? தன் ஊரான இராஜபாளையத்திலேயே, அவர், ஒரு எம்.எல்.ஏ.-ஆக முடியாத நிலைக்குள்ளானார். நேருவின் புது உத்திரவால் நடமாடும் பிணமாக ஆக்கப்பட்டு, ஒரிசா கவர்னராக ஆக்கப்பட்டார். இது, இரண்டாவது மனிதரின் சோகக் கதை!

"அடுத்து, அன்பர் ஆச்சாரியார் ஆட்சிப் பீடத்திற்கு வந்தார்; மூன்றாவது பெரியமனிதராக வந்த அவர்புகழ், அகிலஉலகம்அறிந்தது; 'மகான் வருவாரா — மகாபிரபு வருவாரா — மனிதர்களுக்கு சேவை செய்ய வருவாரா,' என்றெல்லாம், அவர் நாடும் ஏடுகளில் பற்பல தலைப்புகள் கொண்டு பக்கம் பக்கமாக எழுதித் தள்ளப்பட்டன; 'வேதவியாசர்—மேதை — பராக்கிரமர்—இராமாயண அவதரிப்பு—கடவுளைப் பேச, நடமாடவிட சக்தியைக் கொடுப்பவர்—ஆரியச் டாங்கிப் படை வீரர்,' என்றெல்லாம், அவர் துதி பாடும் 'ஏடுகள்' எழுதித் தள்ளின; மகான் மனமிரங்கினார்; பதவியில் அமர்ந்தார்: தி. மு. கழகத்தை போருக்கு இழுத்து, களம் அமைத்தார்: தி. மு. கழகமும் போராட்டக் களத்தில் குதித்தது; ஈ, எறும்பை நசுக்குவது போல், தி. மு. கழகத்தை நசுக்கிவிட எண்ணினார் ஆச்சாரியார்.

"ஆச்சாரியார் வருணாசிரமக் கல்வித் திட்டம் கொண்டுவந்தார்; வேலியோரத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன 'அவசர சாமிகள்; மறியல் நடைபெற்றது; தலைவர்களுக்குச் சிறை—கெடுபிடி உத்தரவு! கல்லக்குடியில் கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற வடவர் பெயர் நீக்கப் போர்; இரயில் நிறுத்தப் போராட்டம்—ஆக, மூன்றும் மும்முனைப் போராட்டங்கள்; அதன் காரணமாக 5,000 பேர் —தலைவர் முதல் தொண்டர்கள் வரை சிறை பிடிக்கப்பட்டனர்; நாடெங்கும் அடக்குமுறை தர்பார் நடைபெற்றது; மறுநாள் 5,001-வது கைதியாக ஆச்சாரியார் ஆக்கப்பட்டார்; சாப்பிடப்போனால்— வெளியே போனால் அவருக்குப் போலீஸ் காவல்; 'பயங்கரக் கைதி'யாக அவர் ஆக்கப்பட்டார்.

"நாங்கள் எழும்பூர் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டோம்; அப்போது, போலீஸ் படை வண்டி—துப்பாக்கி ஏந்திய போலீஸ் படை—ரேடியோ பொருத்திய வண்டியுடன் உள்ள போலீஸ் வண்டி—இடையில் ஒரு கார்—பின்னால் ஒரு போலீஸ் வண்டி—நாங்கள், எங்கள் வண்டியிலிருந்து எட்டிப்பார்த்தோம்; சந்தேகப்பட்டோம்; சார்ஜண்ட்-மேஜர் சொன்னார்—'ஆச்சாரியார் முதல் மந்திரி அழைத்துச் செல்லப்படுகின்றார்,' என்றார், எங்களிடம்! நாங்கள் சொன்னோம்— 'அவருக்கா இவ்வளவு போலீஸ் பந்தோபஸ்து,'—என்று! வெளியே நாங்கள் இருந்தால், 'ஆச்சாரியாரை விடுதலை செய் என்ற குரலல்லவா எழுப்பிருப்போம்,' என்றோம்!

"பின்னர், ஆச்சாரியார் ஆத்தூர்—சேலம் சென்றார்; தன் பவனியைத் துவக்கினார்; மக்களின் எதிர்ப்பு—'ஆச்சாரியாரே, திரும்பிப் போ' என்ற முழக்கம் அவர் செல்லுமிடமெல்லாம் ஒலித்தது; 'தி. மு. க.-வைத்தான் சிறையில் போட்டுவிட்டோமே; இவர்கள் எல்லாம் யார்?' என்று, தான் சென்ற ஊர் அதிகாரிகளைக் கேட்டார்; 'இவர்களும் தி. மு. கழகத்தினர்தான்' என்று அதிகாரிகள் கூறினர்; ஆச்சாரியார், 'இன்னும் இவ்வளவு பேர் இவர்களுக்கு இருக்கின்றார்களா?' என்றார்! அச்சங்கொண்டார்! இன்று அவர் எங்கே? நாம் எங்கே? ஆச்சாரியார் கொண்டுவந்த கல்வித் திட்டமே ஆட்சிபீடத்திலிருந்து அவரைத் தூக்கியெறிந்தது. இன்று பஜனை மடத்தில் 'அரசியல் சமாதி'யாக ஆக்கப்பட்டார்! நாம் இன்னும் வளர்ந்தோம்!

"அடுத்து, காமராசர் வந்துள்ளார். தி. மு. கழகம் கவலையோடு மக்களை அணுகியது; 4, 5 ஆண்டுகளாக, 'மக்கள் எதிரி யார்?' என்பதை எடுத்துக்காட்டியது.

தி. மு. க. பொதுக் குழுவும் தீர்மானமும்

பேரூரில் பொதுக் குழுக் கூடி அரசியலாரின் ஐந்தாண்டுத் திட்டம் திராவிடத்துக்குப் பாதகமாகவும், வடநாட்டின் வாழ்வுக்கு உகந்ததாகவும் இருப்பதை மக்களுக்கு எடுத்துக் காட்டி, ஆட்சியாளரின் வஞ்சகத் திட்டத்தை எடுத்துக் கூறியது; 'வாழ்வு வடக்கே—தேய்வு தெற்கே; இந்த நிலைமை நீடித்தால் எதிர்காலத்தில் தென்னாடு சீரழிந்து விடும்', என்பதை சிற்றூர்—பேரூர் நகரமனைத்தும் கூட்டம் கூடி எச்சரிக்கை செய்து, 'திராவிடம் தனி நாடாக பிரிந்தால்தான் நமக்கு வாழ்வு,' என்ற தீர்மானம் கொண்டுவந்தது; அதன்படி, எதிர்ப்பும் - எச்சரிக்கையும் விடுத்துள்ளோம்.

"ரூபாய்க்கு 14 அணா இலாபம் வடக்கிற்கே செல்லுவதையும், பெரும் பெரும் தொழிற்சாலைகள், இரும்பு உற்பத்தி சாலைகள், மின்சாரத் திட்டங்கள், நீர்ப்பாசனத் திட்டங்கள், மற்றும் பல முன்னேற்ற வசதிகள் பல கோடி ரூபாய்களுடன் — தென்னாட்டுப் பணத்தையும் கொண்டு, வடக்கே மட்டும் செலவிட்டு நம்மை அடிமைகளாக ஆக்கி வருவதையும் மக்களுக்கு எடுத்துக் காட்டி, அதன் உட்கருத்தை காங்கிரசில் உள்ள திராவிடர்களையும் உணரச் செய்து, அவர்கள் வாயாலேயே கண்டனம் தெரிவிக்குமளவுக்கு 5 ஆண்டுத் திட்டத்தின் உட்கருத்தை விளக்கினோம்.

"ஆவடி காங்கிரசு மாநாட்டிலே சோஷலிச மாதிரி தீர்மானம்' கொண்டு வந்து, 'நவ இந்தியாவை நிர்மாணிக்க நாடு பூராவும் திட்டம் தீட்டியுள்ளோம்'—என்று, நம் சென்னை மந்திரிகள் கூறிவருகின்றார்கள்; இவர்களுக்கு எவ்விதமான அதிகாரமும் சுதந்திரமாகச் செய்ய முடியாது; இவர்களெல்லாம் 'மந்திரி மாதிரி'தானே தவிர, மந்திரிகளல்ல; மந்திரிகள் என்பவரெல்லாம், வடநாட்டிலே—டில்லி ஆட்சிபீடத்திலே அமர்ந்திருப்பவர்கள்தான்!

"இதைப் பற்றி எக்கட்சி அக்கரையோடு சிந்திக்கிறது? 'அகில உலக அரசியல்' பேசும் எக்கட்சியும்—ஏன் 'இரத்தத்திலேயே கையைக் கழுவுகிறோம்,' என்று கூறும் கம்யூனிஸ்டுகள் முதல், அகில இந்திய கட்சிகள் வரை ஏன் கண்டிக்கத் துணியவில்லை என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்; எது, 'அகில இந்தியாவோ' அதுகளுக்கெல்லாம் நாம் கூறுவது புரியவில்லை. இங்குள்ள மந்திரிகள், ஆவடி மாநாட்டிலே, 'நேருவின் சோஷலிசமாதிரி' தீர்மானத்தை, 'நான் ஆதரிக்கிறேன்' என்று மட்டும் ஆமோதித்துள்ளனர்; 'சர்க்கஸ் கிளி'போல் வடநாட்டால் ஆட்டுவிக்கப்படுகின்றனர்; 1,500 மைலுக்கு அப்பாலிருந்து ஆளும் வடநாட்டின் 'கைப் பாவை'களாக மாறிவிட்டனர்.

"காமராசர் போலீசு மந்திரி 2¾ அடி ஆயுதம்—1 அங்குல பூண் போட்டது—தினசரி துடைத்து வைத்துக்கொள்ள வேண்டியது— ஒரு எட்டு துப்பாக்கிகள் — துப்பாக்கி கண்டுபிடித்தவர் உள்ள காலத்திலே உள்ளது போன்றவை—அவைகளில் சிலந்தி கூடு கட்டியிருக்கும்; தேள் குஞ்சு பொரித்திருக்கும்; பக்திமானாயிருந்தால் (போலீசு), விபூதி—குங்குமம் பொட்டு வைத்திருக்கும்; இது என்ன செய்ய முடியும்? காக்கி உடை சந்தனையும், வெள்ளை வேட்டி சுப்பனையும் மண்டையை உடைக்கும்; இதுதான் அதிகாரம் —ஆற்றல்—ஆண்மை! சுயமரியாதை என்பது இருக்க வேண்டாமா?

'எனவே, ஆளும் கட்சியினர் நம்முடைய கொள்கையை புரிந்துகொள்ளவேண்டும்; பாண்டுங் மாநாட்டுக்குச் சென்று சமாதானம் பேசுவதை விட, நேரு அவர்கள், காஞ்சீபுரம் சென்று சமாதானம் பேச வேண்டும்; இதைச் செய்வாரா? அவர் செய்தாலும் செய்யாவிட்டாலும், இம் மேதின விழாவில் தொழிலாளர்களாகிய நாம், தி. மு. கழகக் கொடியின் கீழ் ஒன்றுசேர்ந்து, நம்முடைய திராவிடம் தனியாகப் பிரிய ஒவ்வொருவரும் உறுதி கொள்ளவேண்டும்."

உ. பி. சர்க்காரின் ஆமை வேகப் போக்கு!

ஒரு பிரச்சினை தீர ஏழாண்டுகள்; ஏற்பட்ட நஷ்டம் சுமார் ரூ. 1 கோடி

ஜான்சி, மே. 9—

உத்திரப் பிரதேச ரெவினியூ இலாகாவினருக்கும், மத்திய சர்க்கார் பாதுகாப்பு- இலாகாவிற்கும் இடையே நிலம் வாங்கும் பிரச்சினை ஒன்று கடந்த ஆறு ஆண்டு காலமாக நீடித்து வருகிறதாம்.

பாதுகாப்பு இலாகாவினர் துப்பாக்கிப் பயிற்சி பெறவேண்டி ஜான்சியில் மைதானம் ஒன்று வாங்க ஏற்பாடு செய்தார்களாம்; இப்பகுதியில் வாழும் 2,600 குடும்பங்களை வெளியேற்ற வேண்டியிருந்ததாம்; அதற்காக சுமார் ரூ. 42 லட்சம் நஷ்டஈடாகக் கொடுக்க வேண்டியிருந்ததாம்.

1942—43-ம் ஆண்டில் பாதுகாப்பு இலாகாவினர் இந்த நிலத்தை வாங்க ஏற்பாடு செய்தார்களாம். இரண்டாவது உலகப் போர் முடிவடைந்தவுடன் ஏராளமான மக்கள் அங்கே வந்து குடியிருக்க ஆரம்பித்தார்களாம்; அவர்களை வெளியேற்ற எந்த முயற்சியும் செய்யப்படவில்லையாம்.

1948-ம் ஆண்டில் ஜான்சி மாஜிஸ்திரேட், இந்த நிலத்திற்குக் கொடுக்க வேண்டிய நஷ்டஈடு பற்றி நிர்ணயிக்க ஏற்பாடு செய்து புதிய அதிகாரி ஒருவரும் நியமிக்கப்பட்டார்.

இப்பிரச்சினை 1953-ம் ஆண்டு வரை நீடித்து அந்த ஆண்டுமுடிவில் பாதுகாப்பு இலாகாவின் விசாரணைக்குப்பதில் அளிக்கும்முறையில் 'அந்த நிலம் சர்க்காருக்குச் சொந்தமானது,' என்பதை உ. பி. சர்க்கார் அதிகாரி ஒப்புக் கொண்டாராம்.

"உ. பி. சர்க்கார் சுறுசுறுப்புடன் நடந்துகொண்டிருந்தால், இப்போது இவ்வளவு அதிகமாக நஷ்டஈடு கொடுக்க வேண்டியிருக்காது," என்று பாதுகாப்பு இலாகாவினர் கூறுகின்றனர்.

"காலதாமதம் ஏற்பட்டதற்கு பாதுகாப்பு இலாகாதான் காரணம்," என்று உ. பி. சர்க்கார் அதிகாரிகள் கூறுகின்றனர்.

இறுதியாக, மத்திய, மாநில சர்க்கார் தரப்பு அதிகாரிகளும் கூடிப்பேசி, நிலத்தை, மத்திய சர்க்கார் எடுத்துக்கொள்வதெனத் தீர்மானித்துவிட்டார்களாம்.

இப்போது உ. பி. சர்க்கார் அந்த நிலத்தில் குடியிருப்போருக்கு சுமார் ஒரு கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டுமென்று தெரிகிறது.

பிரிட்டிஷ் அரசிக்கு வாக்குரிமை இல்லை!

லண்டன், மே 9—

பிரிட்டனில் நடைபெறும் பொதுத் தேர்தல்களில் மன்னர்கள் வாக்களிப்பது கிடையாது. அவர்கள் வாக்காளர்களாக இருப்பதில்லை. இப்பொழுதுள்ள அரசியார், அடுத்த திங்களில் நடைபெற இருக்கும் பொதுத் தேர்தலில் வாக்களிக்க மாட்டார்.

அரசர்கள், அரசியல் பிரச்சினைகளில் கலந்து கொள்ளாதவர்கள் என்ற நிலையை உறுதி செய்யவே இதுபோன்ற வாக்குரிமைகளை அவர்கள் இழந்து விடுகின்றனர்.

பிரிட்டிஷ் அரசியார், அவரது தங்கை மார்கரெட், தாயார் எலிசபெத் ஆகியோருக்கும் வாக்குரிமை கிடையாது.

அதுபோன்றே, அரச குடும்பத்தைச் சேர்ந்த பிரபுக்களுக்கும் வாக்குரிமை கிடையாது. பிரிட்டனின் அரச குடும்பத்தினரென அதிகார பூர்வமாக ஒப்புக் கொள்ளப்பட்டவர்களில் கொரால்டு லாசலஸ் என்பவருக்கு மட்டுமே வாக்குரிமை இருக்கிறதாம்.

இவர் தனது வாக்குரிமையைப் பயன்படுத்துவாரா என்பது தேர்தலின்போதுதான் தெரியும்.

கழகக் கூட்டம்

★

செங்கம்
கடைத் தெருவில
11—5—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
முல்லை-சத்தி
க. சுப்பிரமணியம்
நெடுஞ்சோழன்

சென்னை பொது, கைத்தொழில் தொழிலாளர் சங்கம்

11-வது ஆண்டு விழாவும், மாநாடும்

10—5—55 மாலை, சென்னை-வண்ணை பாண்டியன் திடலில் (கல்லறை மைதானம்) தோழர் கே. எஸ். ஷெட்டி தலைமையில் நடைபெறும். தோழர் ஏ. வி. குமார் மாநாட்டைத் திறந்து வைப்பார்; தோழர் வி. ஜி. இராமசாமி கொடியேற்றி வைப்பார். தோழர் டி. ஆர். கண்ணபிரான் வரவேற்புரையாற்றுவார். தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் கண்ணதாசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மே விழாப் பொதுக்கூட்டம்

10—5—55 மாலை, நாராயணபாளையத்தில், தோழர் அரங்கசாமி தலைமையில் நடைபெறும் தோழர்கள் ஆ. மணிஎழிலன், ம. கலைநேசன், ப. இரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நான்கு வல்லரசு மாநாடு

ரஷ்யாவிற்கு அழைப்பு

நான்கு வல்லரசுகள் மாநாட்டில் கலந்துகொள்ள வருமாறு ரஷியாவிற்கு, அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய வல்லரசுகள் அழைப்பு அனுப்பும் என்று தெரிய வருகிறது.

நான்கு வல்லரசு நாடுகளின் அதிபர்கள் அல்லது வெளிநாட்டிலாகா அமைச்சர்கள் சந்தித்துப் பேசுவதற்கு அழைப்பு அனுப்பப்படுமாம்.

மாணவிகள் [illegible] சேவை

மகாபலிபுரத்தில் மண்குடிசைகள் சீரமைப்பு

மகாபலிபுரத்திலும், அதைச் சுற்றிலும் இருந்த கிராமங்களிலும் வீடுகள் இடிந்து பரிதாபகரமான நிலையிலிருந்தன.

சென்னையிலிருந்து இங்கு முகாம் செய்த 40 மாணவிகள் இந்த மண் குடிசைகளை எல்லாம் செப்பனிட்டு புதுப்பித்து நற்பணியாற்றியிருக்கின்றனர்.

50-க்கு மேற்பட்ட வீடுகளுக்கு மண் வைத்து சுவர்களைப் பலப்படுத்தி, சுண்ணாம்பு அடித்து, கூரை வேய்ந்து, வீடுகளை புத்தம் புதியனவாக்கினாராம்.

20 நாட்களில் அவர்கள் 51 வீடுகளை புதுப்பித்தனராம்!

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (2[illegible], சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.